# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

<u>ஆணை நாள் **06.04.2026**</u>

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 1522/விசாரணை/E/2022</u>**

திரு முருகையா தவசி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ -- பொது அதிகார அமைப்பு
உதவி இயக்குநர் (தொ.நு)
நில அளவை பதிவேடுகள் துறை,
சென்னை மாவட்டம்

******

**<u>ஆணை</u>**

1) இவ்வழக்கின் மீதான விசாரணை இவ்வாணையத்தில் 05.08.2025 அன்று நடைபெற்றபோது, பிறப்பிக்கப்பட்ட உத்தரவையடுத்து, இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சென்னை மாவட்ட நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையின் தொழில்நுட்ப மேலாளார் 21.08.2025 அன்று ஆணையத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், மனுதாரர் கோரிய விவரங்களை அம்பத்தூர் வட்டாட்சியர் 21.05.2025 அன்று தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பியதாகவும், அந்த விவரங்கள் மனுதாரருக்கு 07.08.2025 அன்று பதிவஞ்சலில் அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்து, அதன் நகலையும், மனுதாரர் அதை பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள 16.08.2025 நாளிட்ட பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், மனுதாரர் மேற்படி 21.08.2025 தேதியிட்ட பதிலை பெற்றுக் கொண்ட பிறகு, அது குறித்து ஏதேனும் தெரிவிக்க விரும்பினால், அதனை எழுத்து மூலமாக இவ்வாணையத்திற்கு 14.11.2025-க்குள் அனுப்பி வைக்க வேண்டுமென உத்தரவிட்டது.

3) இந்நிலையில், மனுதாரரிடமிருந்து இன்று வரையில் (06.04.2026) எவ்வித பதில் கடிதமும் இவ்வாணையத்திற்கு வரவில்லை என்பதால், 21.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், இந்த புகார் மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1522/விசாரணை/E/2022</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி இயக்குநர் (தொ.நு)
நில அளவை பதிவேடுகள் துறை,
சென்னை மாவட்டம்

திரு முருகையா தவசி,
13-1-33, மந்தை தெரு,
தட்டன்குளம்,
சுந்தரபாண்டியபுரம்,
தென்காசி - 627 858

Copy to: File
CR/PA